DEPOSITION OF WITNESS

IN THE COURT OF PRINCIPAL LABOUR COURT, COIMBATORE.

**ID No**. 25/2025

| | |
|---|---|
| DEPOSITION OF WITNESS | WW10 |
| NAME | L. ஞானசேகரன் |
| FATHER NAME | R. லிங்கமுத்து |
| ADDRESS | 58, அம்மன் கோவில் வீதி, சாமராயன்பட்டி, மடத்துக்குளம் தாலுக்கா , திருப்பூர். |
| AGE | 53 |

Solemnly affirmed in accordance with provision of Act x of 1875.

Date.24.04.2026

**முதல் விசாரணை -**

நான் மனுதாரர் சங்கத்திர உறுப்பினராக உள்ளேன். மேற்படி தொழிற்தாவா எனக்காகவும் எனது சங்கத்தை சார்ந்த மேலும் 9 உறுப்பினர்களளுக்காகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கோவிட் காலகட்டத்தில் எனது அனுமதி இல்லாமல் எனது ஈட்டிய விடுப்பு, தற்செயல் விடுப்பு மற்றும் மருத்துவ விடுப்பு சேமிப்புகளில் இருந்து சில நாட்களை கழித்து மாத ஊதியம் வழங்கியுள்ளனர். அது சம்பந்தமாக தொழிற்தாவா தாக்கல் செய்துள்ளேன். எனக்கு ஜீலை 2021 மாதத்தில் இரண்டு நாள் ஈட்டிய விடுப்பை அனுமதி இல்லாமல் கழித்து அதற்குரிய ஊதியத்தை மாத

ஊதியத்துடன் வழங்கியுள்ளார்கள். என்னுடைய சக தொழிலாளி திரு. முருகேசன் இவ்வழக்கில் முதல் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ள Ex W1 வரிசை ஆவணங்களில் உள்ள நான்காவது சம்பள ரசீது என்னுடையதாகும். அந்த கழிக்கப்பட்ட விடுப்பை மீண்டும் எனது விடுப்பு கணக்கில் சேர்த்துகொள்ள வேண்டுமாறு கோரி இம்மனு நான் சார்ந்துள்ள தொழிற்சங்கம் தாக்கல் செய்துள்ளது. இம்மனுவை அனுமதிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

குறுக்குவிசாரணை

நான் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் ஓட்டுநராக கடந்த 20 வருடங்களாக பணியாற்றி வருகிறேன். கோரோனா தொற்று காலகட்டத்தில் எனக்கு தெரியாமலே இரண்டு நாட்கள் EL விடுப்புகளை கழித்து சம்பளம் வழங்கப்பட்டது. சம்பள ரசீதை பார்த்த பிறகு தான் விடுப்பு கழிக்கப்பட்ட விவரம் தெரிந்து சங்கத்தின் மூலமாக வழக்கு தொடர்ந்துள்ளேன். நானும் மற்ற தொழிலாளர்கள் 9 பேரும் சங்கத்தின் மூலமாக வழக்கு தொடர்ந்துள்ளோம். கோரோனா தொற்று காலகட்டத்தில் எனக்கு முழு சம்பளம் வழங்கப்பட்டது என்றால் சரிதான். எங்களுக்கு சுழற்சி முறையில் தான் பணி வழங்கப்பட்டது என்றால் சரிதான். அதற்கு அரசாணை மற்றும்

சுற்றறிக்கை இருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தொகைபேசி மூலமாக தான் எனக்கு அழைப்பு விடுக்கப்பட்டது என்றால் இல்லை. நான் தினமும் வேலை கேட்டு அலுவலகத்திற்கு சென்றேன். நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றும், அந்த காலகட்டத்தில் வெளியேற முடியாத சூழல் இருந்தது என்றால் சரியல்ல. அலைப்பேசியில் என்னை அழைத்து வேலைக்கு வர சொல்லியும் நான் வராமல் இருந்ததால் தான் விடுப்பு கழிக்கப்பட்டது என்றால் தொழிலாளர்களின் முன்னால் வருகை பதிவேட்டின் படியும் மற்றும் வருகையின்மை தொடர்ந்து இருந்ததால் தான் சுமார் 50 முதல் 70 தொழிலாளர்களின் EL மற்றும் CL விடுப்புகள் கழிக்கப்பட்டு, ஆனால் முழு சம்பளம் வழங்கி விடுப்பு நாட்கள் கழிக்கப்பட்டது என்ற விவரத்தை மறுநாள் வேலைக்கு வரும் சமயத்தில் தெரிவித்தும், அத்தியாவசிய தேவை கோரானா தொற்று காலகட்டத்தில் absent ஆக இருந்ததால் தான் இவ்வாறு ஈட்டிய விடுப்பு மற்றும் தற்செயல் விடுப்பு கழிக்கப்பட்டது என்றால் சரியல்ல மற்றும் சுற்றறிக்கைகள் notice board ல் ஒட்டப்பட்டு கோரானா தொற்று காலத்தில் பாதுகாப்பு வழங்கி பணிக்கு வராமல் இருந்ததால் தான் இவ்வாறு கழிக்கப்பட்டது என்றால் சரியல்ல. சுற்றறிக்கைகளும் மற்றும் அரசாணைகளும் அறிவிப்பு பலகையில் ஒட்டப்பட்டிருந்தது என்றால்

சரியல்ல. விடுப்பு கழிக்கப்பட்டது சம்பந்தமாக எதிர்மனுதாரர் நிறுவனத்திற்கு கடிதம் எதுவும் எழுதினேனா என்றால் இல்லை. வேண்டுமென்றே எதிர்மனுதாரர் நிறுவனத்தை பழிவாங்கும் நோக்கில் சங்கத்தின் மூலமாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/-xxx

தலைமை தாங்கும் அதிகாரி,

முதன்மை தொழிலாளர் நீதிமன்றம்,

கோயமுத்தூர்.